1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற சட்டக்கல்லூரி விடுதி நகரின் மத்தியில் அமைந்து இருப்பதாலும் அந்தச் சட்டக்கல்லூரிக்கு அருகாமையில் உள்ள பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே அடிக்கடி போராட்டம் ஏற்பட்டு...... (பணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி மதுரை சட்டக் கல்லூரியைப் பொறுத்தது. ஆகவே, இது போன்ற கேள்விகள் அனுமதிக்கப்பெறுவது இல்லை. உட்காருங்கள்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைச் சட்டக்கல்லூரியினுடைய மாணவியர்களுக்காக மீனாட்சி மகளிர் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டப்படவிருப்பதாக அறிகிறேன். அதனாலே அந்த மாணவியர்கள் கல்லூரிக்குச் செல்ல அது வெகு தூரமாக இருக்கிற காரணத்தினால் அவர்களுக்குப் பேருந்து வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவியர்களுக்கென தனியாக இடத்தை ஒதுக்கித் தரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம்

*வினா எண். 328—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) சந்தூரில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்ட 2 ஏக்கர் நிலம் 10 ஆண்டுகளுக்கு முன் வாங்கப்பட்டதா ?

(ஆ) இந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இப்பள்ளிக்கென 2 ஏக்கர் நிலம் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

(ஆ) இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யும் வகையில், கட்டிடத்திற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் பொதுப்பணித்துறையிடமிருந்து கோரப்பட்டுள்ளன. அவைகள் கிட்டியபின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.